11—9—1991 ஆம் நாளன்று அவையில் பயன்படுத்தப் பட்ட ''பொய்'' என்ற சொல் குறித்து சில பத்திரிகை யாளர்கள் கோரிய விளக்கத்திற்குப் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புரை

1991 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

'' தலைவர் அவர்களே, நண்பர் உகம்சந்த் அவர்கள் பேசும் போது கூட ஒரு மறுப்பு எழுப்பப்பட்டது. ஆனால் ஒரு உறுப்பினர் பேசுவது '' பொய் '', என்று இன்னொரு உறுப் பினர் குற்றஞ்சாட்டும்போது தான் பொய் என்ற வார்த்தை, 'அன்பார்லியமெண்டரி', அப்போதுதான் 'அன்பார்லிய மெண்டரி' என்று சொல்லப்பட்டு விலக்கப்பட வேண்டும். 'பொய்யாக', 'பொய் வழக்கு', 'பொய்க்கூற்று' என்று சொல் வதிலே எப்படி தவறு இல்லையோ, அது போல ஒரு உறுப்பினர் இங்கே பேசுகிற பேச்சைப் பற்றி குறிப்பிடாமல் வெளியிலே நடந்த சம்பவத்தைப்பற்றி குறிப்பிடுகிறபோது, ஒருவர் சொன்னது பொய் என்று சொல்லும்போதுதான் அது அன்பார்லியமெண்டரியாக ஆகாது. பொய் என்ற வார்த்தை யைப் பயன்படுத்தக் கூடாது என்றால், நீங்களே—அவைத் தலைவர் அவர்களைப் பார்த்து சொல்கிறார்—'பொய்மையும், வாய்மையும்' என்ற குறளைக்கூட இங்கே பயன்படுத்த முடியாமல் போய்விடும்'' என்று அன்றைய முதலமைச்சர் அவர்களே இங்கே கருத்துக் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த வகையிலேதான் இங்கே நடந்த சம்பவத்தைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு அந்த வார்த்தையைப் பயன்படுத்தாமல், இங்கே நடைபெறாத சம்பவத்தை ஒருவர் வெளியிலே போய் சொல்வது 'பொய்' என்று சொல்லி இருப்பது எந்த வகையிலேயும் அவையின் மரபுக்கு மாறான செயல் அல்ல என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) சென்னை நகரில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் சிலர் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்கள் சென்னை நகரத்திலே நடந்த ஒரு சம்பவத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். அவருக்கு அனுமதியை வழங்குகிறேன்.

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 நாட்களுக்கு முன்னதாக மாண்புமிகு எங்களுடைய உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய பிரச் சினைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பதில் அளிக்கின்ற போது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிக்கின்ற யாராக இருந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுப்பேன், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவோம் என்று அறிவித்தார்கள்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

அந்தச் செய்தியைக் கேட்டபிறகும்கூட நேற்று சென்னையிலே ஒரு துண்டுப் பிரசுரத்தை இங்கே வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த துண்டுப் பிரசுரம் என்ன என்பதை—பேரவைத் தலைவர் அவர்களே உங்களிடத்திலே அனுமதி பெற்று இருக்கிறேன்—அதைப் படிக்கலாம் என்று கருதுகிறேன்.

முற்பகல் 10–20

''கிளர்ந்தெழு'' என்று நோட்டீசிலே தலையங்கம் கொடுத்து ஈழப் போராளிகளை இழிவுபடுத்தும் ஈனத்தனமான முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது. மனிதாபிமானமும், ஜனநாயக உணர்வும் கொண்ட அனைவரும் ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கைக்கு எதிராக கிளர்ந்து எழ வேண்டுமென்றும் தமிழகத்தில் தஞ்சம் புகுவது ஈழத்தமிழர்களின் கடமையாகும். ஜெயலலிதா, வாழப்பாடி கும்பல் மனிதாபிமான உணர்வுக்கும், இன உணர்வுக்கும் விடுத்துள்ள சவாலை முறியடிக்க நமது ஈழத் தமிழ் மக்கள் உறுதி பூண வேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்களை கொன்று குவித்ததற்கும், பதவி ஏற்றதும் பல இந்தியர்களைக் கொன்று குவித்ததற்கும் காரணமானவர் ராஜீவ். அவரைக் கொலை செய்தது சரிதான் என்றும், ராஜீவைக் கொலை செய்தது வருந்துவதற்கோ அல்லது அனுதாபத்திற்கோ உரியது அல்ல என்றும், மத்திய மாநில அரசுகளே, ஈழ அகதிகளை வெளியேற்றுவதையும், போராளிகளை இழிவுப்படுத்துவதையும், இலங்கைத் தமிழ்மக்கள் மீதான ஒடுக்கு முறைகளை உடனே நிறுத்து என்றும், இந்திய அரசின் ஆதிக்க விஸ்தரிப்புவாத கொள்கைகளை முறியடிப் போம் என்றும், தேசிய இனங்களின் சேமநல உரிமைக்காக போராடுவோம் என்றும் 8 பக்கம் கொண்ட நோட்டீசை அங்கே வெளியிட்டிருக்கிறார்கள். அந்த நோட்டீசிலே இந்தியப் பொதுவுடமை மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் என்றும், தமிழ்நாடு அமைப்பு சார்பில் வெளியிட்டதாகவும் அதிலே தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இதை நக்சலைட்டுகள்தான் வெளியிட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் இன்னொரு கண்டன அறிக்கையையும், அதாவது 5 பக்கம் கொண்ட கண்டன அறிக்கையையும், நோட்டீசாக மக்கள் உரிமைக் கழகத் தலைவர் பி.ப. பக்தவத்சலம் என்பவர் வெளியிட்டுள்ளார். அதிலே, பத்திரிக்கைக் குறிப்பு சொல்கிறது. சென்னையிலே நாங்கள் போராளிகளுக்கு ஆதரவாக நடத்த இருந்த மாநாட்டைப் போலீசார் தடை செய்திருக்கிறார்கள், எனவே தான் அந்த மாநாட்டில் நிறைவேற்றிட இருந்த தீர்மானத்தின் நகல்தான் இது என்றும் அவர்கள் அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே போல இந்த அறிக்கையை ''சென்னை நகரிலே'' சட்டமன்றம் நடக்கின்ற இந்த நேரத்தில், தமிழகத்தினுடைய அமைச்சர்கள் எல்லாம், முதலமைச்சர் அவர்கள் எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூடியிருக்கின்ற இந்த நேரத்தில், சென்னை நகரத்தில் இங்கேயே நோட்டீஸ் அச்சடிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டிருக்கிறது.

1991 செப்டம்பர் 13] [திரு. ஆர். சிங்காரம்]

அதே நேரத்தில், நேற்று மார்வாடியின் கடையில் 4 பேர் திடீரென்று புகுந்து அந்த மார்வாடியை கொலை செய்து நகைகளை கொள்ளையடித்து, வெளியே ஓடும்போது அவர்களைப் பொது மக்களும், போலீசாரும் பிடித்து கைது செய்து வைத்திருக்கிறார்கள். அவர்களும் அனேகமாக விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மிகவும் மோசமான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் நிச்சயமாக அரசியல்வாதிகளின் துணையாகத்தான் இருக்க முடியும். இல்லையேல் தலைநகருக்குள் சட்டமன்றம் நடக்கும்போது புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களையும், எங்கள் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களையும் 'ஹிட் லிஸ்ட்' லே சேர்த்து, கொலை செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு இருக்கும் நடவடிக்கை தான் இந்த நடவடிக்கை எல்லாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சமயத்தில் நீங்கள் இதற்கும் தீவிர நடவடிக்கை எடுத்துக் கண்காணிக்க வேண்டும். அருமை நண்பர் திரு. தண்டாயுதபாணி சொன்னதைப்போல ஒரு விசாரணைக் கமிஷன் போட்டு, அரசியல்வாதி யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி அவர்களையும் கைது செய்து விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இதை மாண்புமிகு முதலமைச்சர் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள் பற்றி திரு. தண்டாயுதபாணி அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிங்காரம் அவர்களும், திரு. தண்டாயுதபாணி அவர்களும் ஒரு முக்கியமான பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது தொடர்பாக சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களும் ஒரு 'Sp cial menti n' இங்கே கொண்டு வந்திருந்தார். அன்று இத்தகைய தேச விரோத நடவடிக்கைகளைத் தடுக்க, தடை செய்ய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்ற உத்தரவாதத்தினை அளித்தேன்.

மதுரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தைப் பற்றி அன்றைய தினம் குறிப்பிடப்பட்டது. அன்றைய தினத்திற்குப் பிறகு, இந்த அவையில் நான் வாக்குறுதி அளித்ததற்குப் பிறகு மதுரை கூட்டத்தில் சம்பந்தப்பட்ட ஏறக்குறைய 5 நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னர், காஞ்சிபுரத்தில்

தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதாக போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன. சம்பந்தப் பட்ட அத்தனை பேரும் உடனடியாக கைது செய்யப் பட்டார்கள். காஞ்சிபுரத்தில் அத்தகைய கூட்டங்கள் நடை பெறாமல் தடை செய்யப்பட்டன. தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் உள்ள அனைத்து எஸ்.பி.க்களுக்கும், உயர் காவல் துறை அதிகாரிகளுக்கும் எல்.டி.டி.ஈ. ஆதரவாளர் களை ஒடுக்க, தேச விரோதச் செயல்களில் அவர்கள் ஈடுபடா மல் இருக்க, தடை செய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, தீவிரமாக எடுக்க வேண்டுமென்று ஏற் கனவே ஆணையிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10–25

இன்று அவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட இந்தப் பிரச்சினை குறித்து நான் சிலவற்றை விளக்க விரும்புகிறேன்.

அம்பத்தூர் காமாட்சி கல்யாண மண்டபத்தில் நடைபெற இருந்த ஈழ விடுதலை அங்கீகரிப்பு மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டி 8–9–91 அன்று மதியம் சுமார் 12.15 மணிக்கு அம் பத்தூர் கனரா வங்கி அருகில் கூடிய பி.வி. பக்தவத்சலம்— அவர் மக்கள் உரிமைக் கழகத்தின் தலைவர் — இந்த பி.வி. பக்தவத்சலம், மற்றும் 62 நபர்களை—10 பெண்கள் உட்பட— காவல் துறையினர் கைது செய்து, அவர்கள்மீது அம்பத்தூர் காவல் நிலைய குற்ற எண் 1143/91, பிரிவு 151 இ.பி.கோ.வில் வழக்கு தொடர்ந்தனர். அவர்கள் அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டனர். அந்த மாநாட்டினை ஒட்டி, மக்கள் உரிமைக் கழகத்தினர் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டு, அதன் பிரதி களை பத்திரிக்கைகளுக்கு அனுப்பியுள்ளனர். சென்னை நகரில் 12-9-1991 ஆம் நாள் விடுதலைப் புலிகளை ஆதரித்தும், என்னை யும், திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களையும் எதிர்த்தும் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் பற்றி அரசின் கவனத் திற்கு ஏற்கனவே வந்துள்ளது. இது குறித்து சென்னை மாநகர காவல் துறை ஆணையர் அவர்களை சட்டப்படி தக்க மேல் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க பணிக்கப்பட்டுள்ளது. தமிழக மக்கள் இது குறித்து அஞ்ச வேண்டிய அவசியமில்லை. உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, என்னையும், திரு. வாழப்பாடி இராம மூர்த்தி அவர்களையும் கொலை செய்யப் போவதாக அறிவித்து, அந்தக் குழுவினர், பி.வி. பக்தவத்சலம் என்பவரின் தலைமை யில் இயங்குகின்ற அந்த குழுவினர், இன்று, 13 ஆம் தேதி மாலை ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பிற்கும் ஏற்பாடு செய் துள்ளனர். சென்னையில் உள்ள பத்திரிக்கையாளர்களுக்கெல் லாம் அவர்கள் ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள். அந்தக் கடி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 13] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

த்தை பக்தவத்சலம் எழுதியிருக்கிறார். அவர் அதில் கூறு கிறார், ''எங்களுடைய கோரிக்கைகள், ஈழ அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்பக் கூடாது; ஈழப் புலிகளுக்கு எதிராக தமிழக அரசு அவதூறுப் பிரச்சாரம் செய்து வருகிறது; இவற்றை எல்லாம் நிறுத்த வேண்டும்; இவற்றைப் பற்றி மக்களுக்குப் புரிய வேண்டுமென்பதற்காகத்தான் தொடர்ச்சி யாக பல மாநாடுகளுக்கும், கூட்டங்களுக்கும் நாங்கள் ஏற்பாடு செய்து வருகிறோம்; ஆனால் அவற்றை எல்லாம் அரசு தடை செய்து விட்டது ; அது மட்டுமல்லாமல் அரசின் தூண்டு தலின் பேரால் பத்திரிக்கைகளில் எங்கள் இயக்கத்தைப் பற்றி, எங்கள் இயக்கங்களைப் பற்றி அவதூறுப் பிரச்சாரம் பரப்பி வருகிறார்கள்; எனவே உண்மை நிலைமைகளை விளக்க இன்று பிற்பகல் 5 மணிக்கு அண்ணா மேம்பாலம் அருகே உள்ள உட்லண்ட்ஸ் டிரைவ்-இன் ரெஸ்டாரண்டில் பிரஸ் மீட் உள்ளது; பத்திரிக்கையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்'' என்று பக்தவத்சலம் அழைப்பு விடுத் திருக்கிறார். இந்தப் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பும் தடை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

எனவே விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களோ, தேச விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களோ யாராக இருந்தாலும், மாநிலம் தழுவிய அளவில் அவர்கள்மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) உறுதியான நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே மேற்கொண்டு வருவதால், நிலைமைகளை ஒவ் வொரு நிமிடமும் கண்காணித்து வருவதால், இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. சிங்காரம் அவர்கள் வேறொரு பிரச்சினை பற்றியும் குறிப்பிட்டார்கள். அதற்கும் என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். நேற்று மாலை பான் ஷாப் கடை வைத்திருக்கிற ஒரு மார்வாடி கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையிலும் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டு இருப்பார்கள் என்று சந்தேகப்படுவ தாக திரு. சிங்காரம் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தக் கொலை பற்றிய தகவல்கள் ஏற்கனவே அரசுக்கு வந்துள்ளன. இந்தக் கொலையைச் செய்தவர்கள் 4 இளைஞர்கள். அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தையும், தஞ்சாவூர் மாவட்டத்தை யும் சேர்ந்தவர்கள். இந்த நான்கு பேரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்கள். கொலை நடந்த சில நிமிடங் களுக்கெல்லாம் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தொடர்பு இருப்பதாக இதுவரை அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.